**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, எம்.எல்.,**

**கூடுதல் சார்பு நீதிபதி, பழனி.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாள் புதன்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 11 ஆம் நாள்)**

**மேல்முறையீட்டு வழக்கு எண் : 34/2023**

**[CNR NO : TNDG07 - 001187 - 2023]**

**[இ.ம.எண்.5/2023 இன் அசல் வழக்கு எண்: 118/2022]**

**[CNR NO : TNDG08 - 000136 – 2022]**

1. மா. முருகன்
2. கா. ராமர் (இறப்பு)
3. கா. கணேசன் --- மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள்

/எதிர்/

1. முத்தவல்லி, கன்னிபீவி மசூதி,
   பாலசமுத்திரம்
2. வட்டாட்சியர், பழனி
3. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   திண்டுக்கல்.
4. காவல்துறை கண்காணிப்பாளர்,
   திண்டுக்கல். --- எதிர்மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள்

[11.06.2025 ஆம் தேதியிட்ட குறிப்பாணையின்படி 2-ம் மேல்முறையீட்டாளர்/2-ம் வாதி இறந்துவிட்டதால், இ.ம.எண்.1/2025-ல் கடந்த 03.09.2025 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவின்படி மேல்முறையீடு திருத்தம் செய்யப்பட்டுள்ளது]

பழனி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இ.ம.எண்.5/2023 இன் அசல் வழக்கு எண்.118/2022 வழக்கில் 06.10.2023 ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

/இடையே/

<u>**விசாரணை நீதிமன்ற தரப்பினர்கள் : –**</u>

1. மா. முருகன்
2. கா. ராமர்
3. கா. கணேசன் ––– வாதிகள்

/எதிர்/

1. முத்தவல்லி, கன்னிபீவி மசூதி,
   பாலசமுத்திரம்
2. வட்டாட்சியர், பழனி
3. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   திண்டுக்கல்.
4. காவல்துறை கண்காணிப்பாளர்,
   திண்டுக்கல். ––– பிரதிவாதிகள்

இந்த மேல்முறையீட்டு வழக்கானது 11.12.2023 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 16.02.2026 ஆம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் S. எட்டீஸ்வரன் மற்றும் B. மாதவபுஷ்பவனம் ஆகியோர் முன்னிலையாகியும், 1–ம் எதிர்மேல்முறையீட்டாளர்/1–ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருமதி. கதீஜாபி மற்றும் திருவாளர் K. குமரேசன் ஆகியோர் முன்னிலையாகியும், 2 முதல் 4 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு வழக்கறிஞர் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களையும், விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள், இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்,

**தீர்ப்புரை**

மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்த மேல்முறையீட்டு வழக்கை அனுமதித்தும், பழனி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடந்த 06.10.2023 அன்று அனுமதிக்கப்பட்ட இ.ம.எண்.5/2023 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்தும், சி.பி.சி. ஆர்டர் 7 ரூல் 11(a) மற்றும் (d)–ன்படி தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.118/2022 வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்தும், வாதியின் அசல் வழக்கினை மீண்டும் முழுமையான விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அசல் வழக்கினை முடிவு செய்ய உத்தரவிடக்கோரி மேல்முறையீட்டாளர்கள்/வாதிகளால் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கானது விசாரணை நீதிமன்றத்தில் விளம்புகை மற்றும் அதன் தொடர்பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மேல்முறையீட்டு வழக்கின் மேல்முறையீட்டாளர்கள் விசாரணை நீதிமன்றத்தில் வாதிகள். எதிர்மேல்முறையீட்டாளர்கள் விசாரணை நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் ஆவார்கள். (வசதி மற்றும் சௌகரியத்திற்காக தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டது போல் இம்மேல்முறையீட்டு வழக்கிலும் அழைக்கப்படுவார்கள்)

**2. விசாரணை நீதிமன்றத்தில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :–**

2.1. வாதிகள் பாலசமுத்திரம் கிராமம் கோட்டை காளியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த சுமார் 600 குடும்பங்களின் தற்கால நாட்டாமை பொறுப்பில் இருப்பவர்கள் ஆவார்கள். வாதிகள் தங்கள் சமுதாய மக்களுக்காகவும், தங்களுக்காகவும் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். பாலசமுத்திரம் கிராமம், சர்வே எண்.867/3 என்பது அரசுப் புறம்போக்கு

நிலமாக இருந்து வருகிறது. மேற்படி நிலத்தின் நடுமையத்தில் 1–ம் பிரதிவாதி சார்ந்த முகமதிய சமுதாய மக்கள் இறந்தால் புதைப்பதற்கு சுமார் 1.5 ஏக்கர் அளவில் தர்கா அமைத்து அதற்குள் இறந்த உடல்களை புதைத்து வருகிறார்கள். தர்காவிற்கு தெற்கே உள்ள பகுதி முன்பு புளியந்தோப்பாகவும், தற்போது தென்னந்தோப்பாகவும், வடக்கே உள்ள பகுதி வாதிகள் சமுதாய மக்கள் பயன்படுத்தும் திறந்தவெளி கழிப்பிடமாகவும் கோட்டை காளியம்மன் கோவில் திருவிழாவிற்கு மேற்படி நிலத்தின் வழியாக பூவோடு எடுத்துச் சென்று அரசுப் புறம்போக்கு நிலத்திற்கு தென்கிழக்குப் பக்கம் உள்ள பாரம்பரியமான கிணற்றில் விடவும், இறந்தவர்களின் உறவினர்களுக்கு மொட்டை அடித்து குளிப்பாட்டும் சடங்குகள் செய்வதற்கும் பன்னெடுங்காலமாக பயன்படுத்தி வருகிறார்கள். 1–ம் பிரதிவாதி நிர்வாகத்தார் கடந்த 2020 ஆம் ஆண்டு மேற்படி அனைத்து சமுதாயத்திற்கும் பாத்தியப்பட்ட அரசுப் புறம்போக்கு பூமியின் மேற்குப் பக்கம் சுற்றுச்சுவர் கட்ட ஏற்பாடு செய்தார்கள். அதற்கு வாதி சமுதாய மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கவே 2–ம் பிரதிவாதி மற்றும் பழனி வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. வாதிகள் சமுதாயத்தினர் நிலத்தை பயன்படுத்த 1–ம் பிரதிவாதி தரப்பினர் ஆட்சேபிப்பதில்லை என்றும், பெண்கள் திறந்த வெளிக் கழிப்பிடமாக பயன்படுத்துவது தெரு மக்களுக்கும், மயானத்திற்கு வரும் மக்களுக்கும் தர்ம சங்கடமாக இருப்பதால் மேற்கு பக்கத்தில் உள்ள சிமெண்ட் ரோடு ஓரத்தில் மறைப்பிற்காக மட்டும் சுவர் வைக்க சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து அரசே செலவு செய்து கட்டிக்கொள்ளலாம் என அதிகாரிகள் ஆலோசனை கூறவே, வாதிகள் அதனை ஏற்றுக்கொண்டார்கள்.

2.2. 1–ம் பிரதிவாதி குயுக்தியாக திட்டமிட்டு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்டவர்கள் மீது சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W.P.(MD) No.4039/2020–ல் ஒரு நீதிப்பேராணை மனு செய்து சுற்றுச்சுவர் அமைக்க பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவு கேட்டார். அதில் வழக்குச் சொத்துக்களை 200 ஆண்டுகளாக அனுபவித்து வருவதாகவும், பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் நீதிமன்றத்தில் அ.வ.எண்.69/1948–ல் ஏற்பட்ட சமாதானத்

தீர்ப்பாணையின்படி உறுதி செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டிருந்தார். அதில் தக்க எதிர்வாதம் செய்யப்பட்டதால் 1–ம் பிரதிவாதி மேற்படி நீதிப்பேராணை மனுவை 01.03.2021 அன்று நீதிமன்றத்தில் இருந்து திரும்பப் பெற்றுக்கொண்டார். அதன் பின்பு தமிழ்நாடு வக்பு வாரிய தீர்ப்பாயத்தில் O.A.No.142/2020–ல் பாலசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த சேகர், தன்னாசி, ராஜாங்கம், ராமு, ரகு மற்றும் சின்னத்தம்பி ஆகியோரை எதிர்மனுதாரர்களாகக் காட்டி ஒரு மனுவை கொடுத்துள்ளார். அதில் காம்பவுண்ட் சுவர் கட்டி அமைதியாக அனுபவிப்பதற்கு தடையோ இடைஞ்சலோ செய்யக்கூடாது என ஒருதலைபட்சமாக தீர்ப்பாணையைப் பெற்றுக்கொண்டுள்ளார். அவ்வாறான தீர்ப்பாணையை பிறப்பிக்க மேற்படி வக்பு வாரியத்திற்கு அதிகார வரம்பு இல்லை. வழக்குச் சொத்துக்கள் வக்பு சொத்துக்களும் அல்ல. மேற்படி தீர்ப்பாணையை ரத்து செய்து முழுமையான விசாரணைக்கு உத்தரவிட வேண்டி வாதிகள் சமுதாயத்தினர் இ.ம.எண்.330/2022–ல் மனு செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது.

2.3. வழக்குச் சொத்து நாளது தேதி வரை அரசுப் புறம்போக்கு மயானம் என்று தான் உள்ளது. அரசு நிலத்தை 1–ம் பிரதிவாதி சார்ந்த சமூகத்தினர் சட்டவிரோதமாக கைப்பற்ற திட்டமிட்டு அ.வ.எண்.69/1948–ல் சமாதான தீர்ப்பு பெற்றுள்ளதாகக் கூறி வருகின்றனர். அவ்வாறான தீர்ப்பாணையில் கண்டுள்ளபடி 1–ம் பிரதிவாதி சமூகத்திற்கு உரிமை மாற்றம் செய்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. வருவாய் ஆவணங்களிலும் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. மதுரை மாவட்ட ஆட்சியர் அரசு நிலத்தை தனிநபருக்கு நீதிமன்ற நடவடிக்கையின் மூலம் விட்டுக்கொடுக்க எவ்வித அதிகாரமும் இல்லை. மேற்படி தீர்ப்பாணை செயல்படுத்த முடியாத மற்றும் செல்லா நிலை தீர்ப்பாணை என்பதால், அது நிறைவேற்றம் செய்யாமல் இருக்கிறது. இந்நிலையில் 1–ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் WP (MD) No. 13755/2022–ல் மீண்டும் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு பாதுகாப்பு கூறி திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு எதிராக மனு செய்து, அதுவும் நிலுவையில் உள்ளது. தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின்

தீர்ப்பாயத்தின் அ.வ.எண்.142/2020 வழக்கில் பெற்ற செல்லா நிலை உத்தரவை அடிப்படையாகக் கொண்டு வழக்கு சொத்துக்களை சுற்றி சுற்றுச்சுவர் எழுப்பி 1–ம் பிரதிவாதியின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்து கேட் அமைத்து பூட்டி வைத்துக்கொள்ள முயற்சிக்கிறார். 1 முதல் 4 பிரதிவாதிகள் அரசு அதிகாரிகளாக இருப்பதாலும், சிறுபான்மையினர் என்ற காரணத்தை காட்டி பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று 1–ம் பிரதிவாதி நிர்வாகத்தின் சட்டவிரோத ஆக்கிரமிப்பிற்கு உறுதுணையாக இருக்கிறார்கள். எனவே, வாதிகள் சமுதாயத்தினர் தொன்று தொட்டு இருந்து வந்த உரிமையை நிரந்தரமாக இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே வழக்குச் சொத்தை அரசுப் புறம்போக்கு என்ற அடிப்படையில் வாதிகள் சமுதாய மக்கள் கோட்டை காளியம்மன் கோவில் திருவிழாவிற்கு மேற்படி நிலத்தின் வழியாக பூவோடு எடுத்துச் சென்று வரவும், இறந்தவர்களின் உறவினர்களுக்கு மொட்டை அடித்து குளிப்பாட்டும் சடங்குகள் செய்வதற்கும், பன்னெடுங்காலமாக தொன்று தொட்டு பயன்படுத்தி வருவதற்கு வாதிகள் சமூகத்திற்கு உரிமை உள்ளது என்று விளம்புகை பரிகாரம் கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டிற்கான காரணங்கள் :–**

3.1. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையானது சட்ட நிலைப்பாட்டிற்கும், இயற்கை நீதிக்கும் எதிரானது. பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் பொருண்மைகளின் அடிப்படையில் அசல் வழக்கை நிராகரித்து தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது. வாதிகளின் வழக்குரை மற்றும் அவர்கள் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே விசாரணை நீதிமன்றம் வழக்கை நிராகரிக்க முடியும். மாறாக விசாரணை நீதிமன்றம் 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்த மனுவின் பிரமாண வாக்குமூலம் மற்றும் அவர்கள் கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் முடிவு செய்வதற்கு சட்டப்படி முகாந்திரமே இல்லை. பழனி மாவட்ட உரிமையியல்

நீதிமன்றமானது இ.ம.எண்.5/2023–ல் மனுதாரர் தாக்கல் செய்த 1 முதல் 4 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்து அவற்றின் அடிப்படையில் அ.வ.எண்.69/1948–ல் ஏற்பட்ட தீர்ப்பு வாதிகளை கட்டுப்படுத்தும் என்றும், வாதிகள் சமூகத்திற்கு எதிராக தமிழ்நாடு வக்பு வாரிய தீர்ப்பாயத்தில் O.A.NO.142/2020–ல் வழக்கு நிலுவையில் இருப்பதாலும், வாதிகளின் அசல் வழக்கு நிராகரிக்கப்படுகிறது என முடிவு செய்துள்ளது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11–க்கு எதிரானது ஆகும்.

3.2. வாதிகள் சமுதாயத்தின் எந்த ஒரு நபரும் அ.வ.எண்.69/1948 வழக்கில் தரப்பினர்கள் அல்ல. மேலும் மேற்படி தீர்ப்புரையானது எழுவினா வனைந்து, தரப்பினர்களின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் முடிவு செய்யப்பட்ட வழக்கும் அல்ல. எனவே மேற்படி வழக்கு தற்போதைய வழக்கிற்கு முரண் தடை ஏற்படுத்தாது. உச்சநீதிமன்றம் Prem kishore vs Brahm Prakash என்ற வழக்கில் பகிர்ந்துள்ள தீப்புரைக்கு முரணாக வாதிகளின் வழக்கை நிராகரித்திருப்பது சட்டப்படி சரியல்ல. அரசுக்குப் பாதியப்பட்ட பொது சொத்தை மாவட்ட ஆட்சியர் தனிப்பட்ட முறையில் அரசு சார்பிலும் உரிய சட்ட அங்கீகாரமின்றி தனி நபர்களுக்கோ, 1–ம் பிரதிவாதி போன்ற மத அமைப்புகளுக்கோ இலவசமாக அளிக்க அதிகார வரம்பு கிடையாது. சட்டவிரோதமாக பாலசமுத்திரம் கிராமம், சர்வே எண்.53/1–ல் ஏக்கர் 5.39–ஐ இனாமாகக் கொடுத்து சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தியது பற்றி உரிய விசாரணைக்குப் பிறகு மேற்படி அ.வ.எண்.69/1948 வழக்கின் முடிவு சரியா? தவறா? என்பதை நிர்ணயிக்க முடியும் என்ற வாதிகள் தரப்பு வழக்கை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது. நடைமுறைக்கு வராத சமாதான தீர்ப்புரை மற்றும் இரு வேறு மதத்தினருக்கு இடையே உள்ள சட்டப் பிரச்சனையை ஒரு சார்புடைய தமிழ்நாடு வக்பு வாரியத் தீர்ப்பாயம் விசாரிக்கும் நிலையில், அதன் சட்டப்படியான தகுதி மற்றும் செயலாக்கம் பற்றி உரிய சிவில் நீதிமன்றம் மட்டுமே விசாரிக்க முடியும் என்ற நிலைப்பாட்டை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. விசாரணை நீதிமன்றம் 1–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்

அடிப்படையில் முடிவு செய்து அசல் வழக்கை நிராகரித்துள்ளதால், வாதிகள் தங்கள் தரப்பு வழக்கை நிரூபிக்க வாய்ப்பளிக்காமல் இருந்துள்ளது குறிப்பிடத்தகுந்தது. தரப்பினர்களின் வாதுரையை முடிவான சாட்சிய ஆவணமாக ஏற்றுக்கொண்டு விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு இந்திய சாட்சியச் சட்டத்திற்கு எதிரானது. தாவா சொத்து வக்பு வாரிய சொத்து என பிரதிவாதிகள் யாரும் வழக்காடவில்லை. வக்பு சொத்து என்ற இலக்கணத்திற்கு உண்டான யாதொரு குணங்களும் வழக்குச் சொத்துக்கு இல்லை என்பதை விசாரணை நீதிமன்றம் சீர்தூக்கி பார்க்கவில்லை. எனவே பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் இ.ம.எண்.5/2023–ல் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து வாதிகளின் அசல் வழக்கை மீண்டும் முழுமையான விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அசல் வழக்கை முடிவு செய்ய உத்தரவிட்டு தீர்ப்பளிக்க வேண்டும்.

**<u>4. இம்மேல்முறையீட்டு வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனைகள் :–</u>**

1. பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் இ.ம.எண்.5/2023 இன் அசல் வழக்கு எண்.118/2022 வழக்கில் 06.10.2023 ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் குறுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் உள்ளதா?
2. பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் இ.ம.எண்.5/2023 இன் அசல் வழக்கு எண்.118/2022 வழக்கில் 06.10.2023 ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?

5. முழு விசாரணைக்கு பிறகு, இரு தரப்பு சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்த விசாரணை நீதிமன்றம், இ.ம.எண்.5/2023 மனுவை ரத்து செய்தும், வாதியின் வழக்கை தள்ளுபடி செய்தும் உத்தரவு, தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மனக்குறைவுற்ற வாதியால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6. மேல்முறையீட்டு வினா எண்கள். 1 மற்றும் 2–க்கான தீர்வுகள் :–**

6.1. மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் விசாரணை நீதிமன்றமானது 1–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பொருண்மைகளின் அடிப்படையில் வழக்குரையை நிராகரித்து தீர்ப்பாணை பிறப்பித்துள்ளதாகவும், வழக்குரையின் பொருண்மைகளின் அடிப்படையிலும் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் பொறுமைகளின் அடிப்படையிலும் மட்டுமே அசல் வழக்கை நிராகரிக்க முடியும் என்றும் விசாரணை நீதிமன்றம் 1–ம் பிரதிவாதி தரப்பில் இடை மனுவில் தாக்கல் செய்யப்பட்ட 1 முதல் 7 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் வழக்குரையை நிராகரித்து உத்தரவு பிறப்பித்துள்ளது சட்டத்திற்கு முரணானது என்றும் தெரிவித்து வாதிடப்பட்டுள்ளது.

6.2. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 2, 3 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றின் மூலம் சர்வே எண்.867/3–ல் உள்ள ஏக்கர் 5 சென்ட் 39 உள்ள இடமானது வக்பு வாரியத்திற்கு பாத்தியப்பட்ட இடம் என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் வழக்குச் சொத்தானது வக்பு வாரியத்திற்கு பாத்தியப்பட்டது என்பதால், உரிமையியல் நீதிமன்றங்களில் வழக்கை நடத்த அதிகாரம் இல்லை என்றும், வாதிகள் O.A.No.142/2020–ன் தீர்ப்புரை, தீர்ப்பாணை, ஒருதலைபட்ச தீர்ப்பு ஆகியவற்றை வழக்குரை ஆவணங்களாகத் தாக்கல் செய்ததில், மேற்படி சங்கதி தெரியவந்துள்ளது என்றும், வாதிகள் இவ்வழக்கையும் தமிழ்நாடு வக்பு வாரியத்திலும் ஒரே வழக்கு மூலத்திற்கு வழக்கை நடத்த இயலாது என்றும், அசல் வழக்கு சொத்தானது சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்றும், தமிழக அரசின் அ பதிவேட்டில் வழக்குச் சொத்தானது Mosque and burial ground Porombokke என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்தானது வக்பு வாரியத்திற்கு பாத்தியப்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அ.வ.எண்.69/1948 வழக்கில் சுமூக முறையில் தீர்வு ஏற்பட்டு சமரச மனுவின் பெயரில் வழக்குச் சொத்தானது வக்பு வாரியத்திற்குப் பாத்தியப்பட்டு அரசு நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டு கடந்த 100 வருடங்களுக்கு மேலாக வக்பு வாரியத்தின்

அதிகாரத்தின் கீழ் உள்ளது என்றும், வாதிகளுக்கு எதிர்ப்பு இருந்திருந்தால் ஒரு வருட காலத்திலேயே எதிர்ப்பு தெரிவித்திருக்க வேண்டும் என்றும், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட சொத்திற்கு மீண்டும் வழக்கு நடத்த முடியாது என்றும் வாதிடப்பட்டது.

6.3. வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்ததில் விசாரணை நீதிமன்றம் இ.ம.எண்.5/2023–ல் 1 முதல் 7 வரையிலான ஆவணங்களைக் குறியீடு செய்துள்ளது தெரியவருகிறது. வக்பு வாரியத்தில் தாக்கல் செய்யப்பட்ட O.A.No.142/2022–ன் வழக்குரை மற்றும் அதன் உத்தரவுகள், மேற்படி O.A.No.142/2022–ல் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.531/2022–ன் மனு மற்றும் உத்தரவுகள், பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண்.69/1948–ல் தாக்கல் செய்யப்பட்ட சமரச மெமோ நகல் மற்றும் சமரசத் தீர்ப்பாணை, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தகவல் அறியும் உரிமை உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட செட்டில்மெண்ட் பதிவேட்டு அடங்கல் நகல், மேலும் வக்பு சொத்து சம்மந்தமான அரசாணை மற்றும் வழக்குச் சொத்திற்கான அடங்கல் ஆகிய ஆவணங்களை விசாரணை நீதிமன்றம் மேற்படி இடைமனுவில் குறியீடு செய்துள்ளது தெரியவருகிறது.

6.4. விசாரணை நீதிமன்றமானது தனது உத்தரவில் மேற்படி ஆவணங்களைப் பரிசீலித்து அவற்றைக் குறித்து விவாதித்துள்ளது. அதன்படி அ.வ.எண்.69/1948 வழக்கில் சமாதான தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டு, அதனடிப்படையில் புல எண்.53/1 ஆனது மசூதி மற்றும் மயானப் புறம்போக்கு என மாற்றம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், வக்பு வாரியத்திற்கு சொத்தை ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி புல எண்.53/1 ஆனது 53/1B என உட்பிரிவு செய்யப்பட்டு ஏக் 5.39 சென்ட் நிலமானது மசூதி மற்றும் மயானப் புறம்போக்கு என மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆகிய ஆவணங்களின்படி தாவா நிலமானது மசூதி, மயானம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கருத்துக்களைத் தெரிவித்து விசாரணை

நீதிமன்றமானது வழக்குச் சொத்து வக்பு வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்து என்றும், அதனைப் பொறுத்து வழக்கை நடத்த நீதிமன்றத்திற்கு ஆள்வரையறை இல்லை என்றம், வக்பு வாரியத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து வாதிகள் உரிமை மூலம் கோரவோ, பரிகாரம் கோரவோ முடியாது என்றும் தெரிவித்து வழக்குரையை நிராகரித்து உத்தரவு பிறப்பித்துள்ளது. விசாரணை நீதிமன்றமானது வாதிகள் தாக்கல் செய்த வழக்குரை மற்றும் வாதிகள் தரப்பு ஆவணங்களின்படி அல்லாமல் 1–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் அவர்கள் தரப்பு ஆவணத்தின் அடிப்படையில் உத்தரவு பிறப்பித்துள்ளது தவறு என மேல்முறையீட்டாளர் தரப்பில் சுட்டிக்காட்டி வாதிடப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றம் 1–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைப் பரிசீலித்து அதனடிப்படையில் வழக்குரையை நிராகரித்தது தவறு என எடுத்துக்கொண்டாலும், தற்போது மேற்படி ஆவணங்களைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால் அசல் வழக்குரை நிராகரிக்கப்படத்தக்கதா? என்பதை ஆராயவேண்டியது அவசியமாக உள்ளது.

6.5. வாதிகள் தரப்பு வழக்குரையில் அ.வ.எண்.69/1948–ல் ஏற்பட்ட சமாதான தீர்ப்பாணையின்படி வழக்குச் சொத்துக்களில் 1–ம் பிரதிவாதி தரப்பினர் உரிமை கொண்டாடுவதாகவும், சுற்றுச்சுவர் கட்ட முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மதுரை மாவட்ட ஆட்சியர் அரசு நிலத்தை தனிநபருக்கு நீதிமன்ற நடவடிக்கையின் மூலம் விட்டுக்கொடுக்க எவ்விதமான சட்டப்படியான அதிகாரமும் இல்லை என்றும், மேற்படி தீர்ப்பாணை செயல்படுத்த முடியாத தீர்ப்பாணை என்றும், அத்தீர்ப்பாணை நிறைவேற்றம் செய்யாமல் இருக்கிறது என்றும், வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு விபரக்குறிப்பில் அ.வ.எண்.69/1948 வழக்கின் தீர்ப்புரையானது எழுவினாக்கள் வனைந்து தரப்பினர்களின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் முடிவு செய்யப்பட்ட வழக்கு அல்ல என்றும், பொதுச் சொத்தை மாவட்ட ஆட்சியர் தனிநபர்களுக்கோ அல்லது மத அமைப்புகளுக்கோ இலவசமாக அளிக்க அதிகார வரம்பு இல்லை என்றும், உரிய விசாரணைக்குப் பிறகே

அ.வ.எண்.69/1948 வழக்கின் முடிவு சரியா? தவறா? என்பதை நிர்ணயிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் மேற்படி வாதுரைகளைப் பரிசீலித்ததில் அ.வ.எண்.69/1948 வழக்கில் அரசுப் புறம்போக்கு நிலத்தை 1-ம் பிரதிவாதி தரப்பினருக்கு மாவட்ட ஆட்சியர் அளித்து சமாதானத் தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளதைப் பொறுத்து வாதிகளுக்கு ஆட்சேபணை இருப்பதாகத் தெரியவருகிறது. அதாவது 1948 ஆம் வருடம் நடந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட சமாதானத் தீர்ப்பாணையின் மீது வாதிகள் தற்போது ஆட்சேபணை எழுப்பி Re-litigation நடத்த முயற்சிப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. விசாரணை நீதிமன்றம் குறியீடு செய்துள்ள ஆவணங்களைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தாலும், வாதிகள் காலம் கடந்த நிலையில் வழக்கைத் தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

6.6. மாண்புமிகு உச்சநீதிமன்றம் T. Arivanandam --- Vs --- T.V.Sathyapal and another என்ற வழக்கில் "<u>.....The learned Munsif must remember that if on a meaningful-not formal-reading of the plaint it is manifestly vexatious, and meritless, in the sense of not disclosing a clear right to sue, be should exercise his power under Or. VII r. 11 C.P.C. taking care to see that the ground mentioned therein is fulfilled. And, if clever drafting has created the illusion of a cause of action, nip it in the bud at the first hearing by examining the party searchingly under Order X C.P.C. An activist Judge is the answer to irresponsible law suits....</u>" என்று குறிப்பிட்டுள்ளது.

இவ்வழக்கிலும் வாதி தரப்பானது Clever drafting மூலமாக காலவரையறை தாண்டிய வழக்கை காலவரையறைக்குள் இருப்பதாக புனைந்துள்ளது. இந்த வழக்கில் 1948 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் நீதிமன்றம் பிறப்பித்த சமரசத் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ஏறத்தாழ 70 வருடம் கழித்து Re-litigation-க்கு உட்படுத்த வாதிகள் தரப்பானது முயன்றுள்ளது தெரியவருகிறது. மேற்கண்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பில் வழக்குரையைப் பெயரளவில் படிக்கக்கூடாது என்றும், அதனைப் பொருள்கொண்டு படித்து தேவையற்ற வீணான வழக்குகளை ஆரம்ப நிலையிலேயே அகற்ற வேண்டுமென மாண்புமிகு உச்சநீதிமன்றம்

கருத்துக்களைத் தெரிவித்துள்ளது. எனவே அசல் வழக்குரையை நிராகரித்து பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு சரியானது என்றும், அதில் குறுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் பழனி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் இ.ம.எண்.5/2023 இன் அசல் வழக்கு எண்.118/2022 மனு மற்றும் வழக்கில் 06.10.2023 ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் குறுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என இம்மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே மேற்கண்ட எழுவினாக்களுக்கு தீர்வுகள் காணப்படுகிறது.

முடிவாக,

அ) மேல்முறையீட்டாளர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்டும்,

ஆ) விசாரணை நீதிமன்றமான மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் இ.ம.எண்.5/2023 இன் அசல் வழக்கு எண்.118/2022 வழக்கில் 06.10.2023 ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இ) தரப்பினர்களின் உறவு முறை மற்றும் வழக்கின் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு செலவுத் தொகை இல்லை எனவும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2026.03.25 18:00:56 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.

**மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை**

**எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை**

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.03.25 18:01:04 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.</u>**
மே.மு.வ.எண்.34/2023
**<u>தெளிவு/வரைவு தீர்ப்புரை</u>**
நாள் – 25.03.2026